**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 18.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**வழக்கு எண்.SA 7358/E/2018**

திரு பொ.கருணாகரன் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 08.12.2017 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 05.07.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 01.10.2018 |

******

**ஆணை**

இன்று (18.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு பொ.கருணாகரன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு போ.கமலக்கண்ணன், துணை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 08.12.2017 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம்,

பரந்தூர் குறுவட்டம், நெல்வாய் கிராமத்தில், பட்டா எண்.596, புன்செய் நி.அ.எண்.375/1 பரப்பு 0.60.50 ஏர் நிலத்தில் உள்ள ஆழ்துளைக் கிணற்றிற்குத் தக்கல் முறையில் புதிய மின் இணைப்பு வழங்க மறுத்து விட்டதாகவும், மின் இணைப்பு பெறச் சான்று வேண்டி 11.09.2017, 25.09.2017 மற்றும் 09.10.2017 ஆகிய மனுநீதி நாட்களில் மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களிடம் அளித்த மனுக்கள் மீது மனுவின் நாள்வரைத் தனது கோரிக்கைக்குப் பதில் இல்லையென்றும் தெரிவித்து, மேற்படி மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காமைக்கு உரிய தகவலைக் கோரி, மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 20.12.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாகத் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் குறைதீர் நடவடிக்கைகள் கோர இயலாதெனப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தருமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 05.07.2018 தேதியிட்ட மனுவைப் பொதுத் தகவல் அலுவலர், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவானது 27.07.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தன் மனு மீது எந்த நடவடிக்கையும் இல்லையென்றும், உரிய நடவடிக்கை வேண்டியும் மேல்முறையீட்டாளர் 01.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (18.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான துணை வட்டாட்சியர், மேல்முறையீட்டாளர் மேற்படி இடத்திற்கு மின் இணைப்பு வேண்டி சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரை அணுகியுள்ளதாகவும், மேற்படி இடத்தைத் தணிக்கை செய்தபோது, மேல்முறையீட்டாளர் மேற்படி புலத்தில் ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்திருந்ததாகவும், அதனைத் தொடர்ந்து மேற்படி இடத்திற்கு மின் இணைப்புச் சான்று வழங்கியுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் வாக்குமூலம் அளித்துள்ளதாகவும் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. வாத, பிரதிவாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு முறையான தகவல் வழங்கப்படவில்லையென்பது தெரிய

வருகிறது. இதனை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**மேல்முறையீட்டாளர் 08.12.2017 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவல் தொடர்பாக, சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரைப் பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவலை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 7358/E/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு பொ.கருணாகரன்,
எண்.32B/46, வைத்தியர் தெரு,
பெரிய காஞ்சிபுரம்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 502.

Copy to: Judgement File.
24/09/19